[2012 ஏப்ரல் 25

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சூறாவளிக் காற்றால் பாதிக்கப்பட்ட வாழை, தென்னை, வீடுகளுக்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *4, 5 மாவட்டங்களில் சூறாவளிக் காற்று ஏற்பட்டு, பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அது தொடர்பாக இன்றைக்குத்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். இதுகுறித்து அரசினுடைய பதில் வந்தவுடன், அதனை எடுத்துக் கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளிகளின் குறைந்தபட்சக் கூலிச் சட்டம் குறித்தும், நோக்கியா. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)* Please sit down. *ஏற்கெனவே இந்தப் பிரச்சினை தொடர்பாக திருநெல்வேலியிலே முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டது. அதை மறுபடியும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அது துறையினுடைய ஆய்விலே உள்ளது. பதில் வந்தவுடன், அதனை எடுத்துக்கொள்ளலாம்.*

(அ) பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் கோட்டாறு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வழங்குதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். நீங்கள் இரண்டு பிரச்சினைகளுக்கும் சேர்த்துப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்; அதாவது, அந்த சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகள் குறித்தும், பன்றிக் காய்ச்சல் குறித்தும் சேர்த்தே பதில் சொல்லிவிடுங்கள்.*

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஆயுஷ் துறை, திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் இருக்கின்ற சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் கன்னியாகுமரி, கோட்டாறில் உள்ள ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை ஆய்வு செய்து, சில*

2012 ஏப்ரல் 25] [டாக்டர் வி.எஸ். விஜய்]

குறைபாடுகளைக் கண்டறிந்து, 2011–2012 ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்குத் தடை விதித்தது. அதன்பிறகு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி அமைந்த பிறகு, அந்தக் குறைபாடுகள் எல்லாம் களையப்பட்டு, திரும்பவும் அக்கல்லூரிகளை ஆய்வு செய்ய அவர்களை அணுகியபோது, எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. மத்திய அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியும் பதில் இல்லை. அதன்பிறகு தமிழக அரசு, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில், இரண்டு கல்லூரிகளிலும் மாணவர் சேர்க்கை நடைபெற்றது.

முற்பகல் 11–15

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, அங்கீகாரம் வேண்டும் என்று கோரிக்கை வைத்தேன்; எந்தப் பலனும் இல்லை. அதன்பிறகு, பாதிக்கப்பட்ட மாணவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி, வகுப்புகளைத் தொடங்க ஆணை பெற்றார்கள். நீதிமன்ற ஆணையின் அடிப்படையில்தான் தற்பொழுது வகுப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், மத்திய அரசின் ஆயுஷ் துறை திரும்பவும் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று, தடையாணை கேட்டு, அதை நீதிமன்றம் மறுத்திருக்கிறது. இப்பொழுது, ஆயுஷ் துறை உச்ச நீதிமன்றத்தை அணுகப் போவதாக அறிகிறோம். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் “இந்த வகுப்புகள் தொடர்ந்து நடைபெறுமா, இல்லையா?” என்று கேட்டார்கள். வகுப்புகள் தொடர்ந்து நடைபெறுவது ஆயுஷ் துறையின் அணுகுமுறை மற்றும் நீதிமன்றத் தீர்ப்பினைப் பொறுத்தே அமையும். இந்த விஷயத்தில், மாற்றாந்தாய் மனப்பான்மையோடு மத்திய அரசு செயல்படுகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம் ஆகும். இதில் வேடிக்கை என்னவென்றால், வேடிக்கை என்று சொல்வதைவிட, வெட்கக்கேடு என்னவென்றால், தி.மு.க.–வைச் சேர்ந்த திரு. காந்திசெல்வன்தான் மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சராக உள்ளார். மத்தியில் ஆளுகின்ற காங்கிரஸ் மற்றும் தி.மு.க. கூட்டணி அரசு எதை எதையோ தமிழகத்திற்குச் செய்வதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால், தமிழ் மருத்துவமான, சித்த மருத்துவத்தை உதாசீனப்படுத்துகிறது. உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை; உபத்திரவம் செய்யாமல் இருந்தாலே போதுமானது.

கல்வியைக்கூட அரசியல் ஆக்குகிறார்கள் என்பதுதான் அப்பட்டமான உண்மை. தமிழ்நாட்டில் வாய்கிழியப் பேசும் தி.மு.க.-வினரும், காங்கிரஸ்காரர்களும் இதற்கு ஒரு தீர்வினைத் தந்தால் மாணவர்களின் புண்ணியமாவது அவர்களுக்குக் கிடைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் மொழி, தமிழ் இனம் என்று வாயால் மட்டுமே சொல்லித் திரிபவர்களைப்போல் அல்லாமல், தமிழ்ப் பாரம்பரிய மருத்துவத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய முக்கியத்துவம் கொடுத்து, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் கோட்டாறு அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் ரூ.10 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, பலப்படுத்த நடவடிக்கை எடுக்க ஆணையிட்டு இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பன்றிக் காய்ச்சல் நோய் தமிழகத்தில் பரவுவதைத் தடுத்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: அடுத்ததாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் பன்றிக் காய்ச்சலைப் பற்றி கேள்வி கேட்டார்கள். பன்றிக் காய்ச்சலைப் பற்றி விரிவாகவும், தெளிவாகவும், தேவைக்கு மேலாகவும் இந்தச் சட்டமன்றத்தில் பேசியிருக்கின்றேன். இன்றைக்கு 77 பேர் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதிலே, அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 60 பேர், நலமுடன் இருக்கின்றார்கள். இதிலே பெரிய பிரச்சினை என்னவென்றால், முதலிலேயே தங்களுடைய உடம்பில் எதிர்ப்பு சக்தி குறைந்த 4 பேர், தனியார் மருத்துவமனைகளில் முதலிலே சிகிச்சை பெற்று இருக்கிறார்கள். தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றவர்களுக்கு முதலிலேயே டாமிபுளு மாத்திரை கொடுக்கப்படவில்லை. அவர்கள் என்ன காரணத்தினாலோ கொடுக்காமல் விட்டுவிடுகிறார்கள். பன்றிக் காய்ச்சலைப் பொறுத்தவரையில், டாமிபுளு மாத்திரையைத் தவிர வேறு எந்த மாத்திரையும் கிடையாது. ஆகவே, பன்றிக் காய்ச்சலுக்கான

2012 ஏப்ரல் 25] [டாக்டர் வி.எஸ். விஜய்]

அறிகுறி வந்தவுடனேயே டாமிபுளு மாத்திரையை கொடுத்துவிட்டால், சிகிச்சை முறையில் நல்ல பலன் கிடைக்கும். இல்லாவிட்டால் இரத்தத்திலே பன்றிக் காய்ச்சலுக்கான அறிகுறி அதிகமாகி, உடல் உறுப்புகள் எல்லாம் பாதிக்கப்பட்டுவிடும். அதன்பிறகு, டாமிபுளு மாத்திரை கொடுப்பதால் எந்தவிதமான பலனும் இல்லை. ஆகவே, இன்றைக்குத் தனியார் மருத்துவமனைகளுக்கெல்லாம் "பன்றிக் காய்ச்சலுக்குச் சரியான முறையில் சிகிச்சை அளிக்க முடியாவிட்டால் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிடுங்கள்" என்ற செய்தி அனுப்பப்பட்டு இருக்கிறது. ஆகவே, இன்றைக்குத் தமிழ்நாட்டில் பன்றிக் காய்ச்சல் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

(ஆ) பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் கோட்டாறு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வழங்குதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் தவறு ஒன்றும் இல்லையே? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில், 'உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை; உபத்திரவம் செய்யக்கூடாது' என்று சொன்னார். இதிலே என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவமனைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சி நல்ல தீர்வினைக் காணவே விரும்புகிறது. நாங்களெல்லாம் அங்கே நேரில் சென்று, அந்தப் பிரச்சினையை நிச்சயமாகத் தீர்த்து, அங்கு படிக்கக்கூடிய மாணவர்களுக்கு அனுமதி வழங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டோம். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். அவ்வளவுதான். நீங்கள்தான் ஒத்துழைப்புக் கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டீர்களே!* Please, sit down. *(குறுக்கீடு) இதில் விவாதம் வேண்டாம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் இருக்கின்ற காங்கிரஸ்*

[டாக்டர் வி.எஸ். விஜய்] [2012 ஏப்ரல் 25

நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களிடம் பல முறை சொல்லிவிட்டேன். கன்னியாகுமரியில் 3 பேர் இருக்கிறீர்கள். உங்களிடமும் சொல்லியாகிவிட்டது. நானும், மத்திய அமைச்சரை நேரில் சந்தித்து மனுவும் கொடுத்துவிட்டேன். ஆனால், எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (குறுக்கீடு)

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தவறில்லை. உட்காருங்கள் திரு. ஜே.ஜி. பிரின்ஸ். Please sit down. Mr. N.R.Rengarajan, நீங்கள் உங்கள் உறுப்பினர்களை control செய்யுங்கள். இதில் point of order ஒன்றுமில்லை. Minister, fact–ஐத்தான் சொல்கிறார். 'நானே போய் represent பண்ணினேன்; வேறு no action' என்று சொல்கிறார். It is a fact. உண்மையைச் சொல்கிறார். வேறு எப்படி சொல்லச் சொல்கிறீர்கள்? உண்மையை வேறு எப்படி சொல்லச் சொல்கிறீர்கள்? எந்த மாதிரி சொல்லச் சொல்கிறீர்கள் உண்மையை? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சரைச் சந்தித்து, தானே நேரில் அது சம்பந்தமான கோரிக்கைகளைக் கொடுத்தார் என்ற அந்த உண்மையைச் சொல்கிறார். அது உண்மைதானே? உண்மையைத் திரித்துச் சொல்கிறாரா அவர்? அந்த உண்மையை வேறு எப்படிச் சொல்ல முடியும்? அதில் மாறுபட்ட கருத்து இல்லை. Please sit down. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள்.

***திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுர்வேத கல்லூரி பிரச்சினையைப் பொறுத்து நாங்கள் நேரில் சென்று வலியுறுத்தியிருக்கின்றோம். அதில் infrastructure சரியாக இல்லை. எங்களுடைய request–னால்தான் மத்திய குழு வந்து, அந்த இடத்தைப் பார்வையிட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் அந்தக் கல்லூரி நிச்சயமாக இயங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இருக்கிறோம் என்பதையும் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு மத்திய அமைச்சரைச் சந்தித்துப் பேசவும் தயாராக இருக்கிறோம்.